வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 10.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை உத்தரபிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.
- அனைத்து பிரிவு மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையில், மத்திய அரசு அறிவித்துள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், குறிப்பாக கைவினைத் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.
- குடியரசு துணைத் தலைவர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, உலக தற்கொலை தடுப்பு தின விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

மோடி

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை உத்தரபிரதேசம் மற்றும் உத்தராகண்ட மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்கிறார். வாரணாசியில் மொரிசீயஸ் பிரதமர் டாக்டர் நவீன்சந்திர ராம்கூலத்தை திரு நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கிறார். குறிப்பாக கல்வி, சுகாதாரம், அறிவியல்-தொழில் நுட்பம், உள்கட்டமைப்பு, புதுப்பிக்க வல்ல எரிசக்தி, டிஜிட்டல் பொது கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து, இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர். தொடர்ந்து நாளை

மாலை பிரதமர் டேராடூன் சென்று, உத்தராகண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வான்வழியே பார்வையிடுகிறார். மூத்த அதிகாரிகளுடன் உயர்நிலை கூட்டம் ஒன்றையும் பிரதமர் நடத்த இருக்கிறார்.

<u>அமை□ச்சரவை</u>

பீகார், ஜார்கண்ட் மற்றும் மேற்கு வங்கத்தில், பாகல்பூர்-தும்கா-ராம்பூர்ஹாட் ஒற்றை ரயில் பாதையை, 3 ஆயிரத்து 169 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரட்டை பாதையாக மாற்றும் திட்டத்திற்கு பொருளாதார விவகாரங்கள் பற்றிய மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. பீகாரில், பக்ஸார்-பாகல்பூர் உயர்வேக நெடும்பாதையின் மொக்காமா-முங்கேர் பிரிவில், 4 ஆயிரத்து 447 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிதாக 4 வழிச் சாலை அமைக்கும் திட்டத்திற்கும் அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற, அமைச்சரவைக் குழுவின் கூட்டத்திற்கு பின்னர், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட பகுதிகளில், விரிவான வளர்ச்சி மூலம் மக்களின் சுயசார்பை மேம்படுத்த இத்திட்டத்தினால் ஏதுவாகும் என்று அவர் கூறினார்.

<u>□திப்பீடு</u>

உலக நாடுகளின் பொருளாதாரத்தை மதிப்பிடும் Fitch சர்வதேச நிறுவனம், நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பற்றிய 6.5 சதவிகித மதிப்பீட்டை, 6.9 சதவிகிதமாக உயர்த்தி உள்ளது. இந்தியாவில் உள்நாட்டு அளவிலான தேவைகளும் நுகர்வோர் செலவினங்களும் அதிகரித்து, நிதி நிலவரங்களும் சாதகமாக இருப்பதன் அடிப்படையில், வளர்ச்சி மதிப்பீடு இவ்வாறு திருத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ள ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள்

பொதுவாக இந்திய நிறுவனங்களின் கடன் தீர்ப்புத் திறனை மேம்படுத்துவதாக அமையும் என்றும், அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பினால் இந்தியாவின் ஏற்றுமதி குறையலாம் என்ற அச்சங்களுக்கு இடையிலும், ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் நுகர்வு அதிகரித்து, வளர்ச்சி வாய்ப்புகள் ஊக்கம் பெறும் என்றும், பிட்ச் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***<u>ஜிஎஸ்டி-கைவினை</u>***

இவ்வாண்டு சுதந்திர தினத்தன்று, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து, நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக பிரதமர் அறிவித்த அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் படி, ஜிஎஸ்டி சபை, கடந்த 3-ஆம் தேதி பல்வேறு துறைகளுக்கான வரிக் குறைப்பை அங்கீகரித்துள்ளது. அனைத்து பிரிவு மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும் வகையிலான இந்த வரி சீர்திருத்தங்களால், குறிப்பாக கைவினைத் துறையில், முக்கிய பலன்கள் ஏற்பட உள்ளன.

***<u>ஜிஎஸ்டி-கைவினை-</u>***

மத்திய அரசு, பலவித கைவினைப் பொருட்கள் மீதான 12 சதவிகித சரக்கு மற்றும் சேவை வரியை, 5 சதவிகிதமாக குறைத்து இருப்பதால் . பாரம்பரிய கைவினைத் துறையும், கைவினைக் கலைஞர்களும் பெருமளவில் ஊக்கம் பெறுகிறார்கள். கல், மரம் மற்றும் உலோகத்தாலான கைவினைப் பொருட்கள், கண்ணாடி, தாமிரம், அலுமினியம், மற்றும் பித்தளையில் செய்த அலங்காரப் பொருட்கள், அசல் ஓவியங்கள் மற்றும் மர வேலைப்பாடுகளுக்கு, இந்த வரிக் குறைப்பு பொருந்தும். இதனால் உள்நாட்டு அளவில் கைவினைப் பொருட்களின் விலை குறைவதுடன், உலகச் சந்தையிலும் இந்திய கைவினைப் பொருட்களின் போட்டித் திறன் அதிகரிக்கும். பாரம்பரிய கைவினைப் பொருட்களின் தேவையும்

ஏற்றுமதியும், ஊக்கம் பெறும். இதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நாட்டின் கலாச்சாரப் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் ஏதுவாகும். கைவினைத் துறையைப் பிழைக்க வைப்பதற்கு அப்பாற்பட்டு, இத்துறை மேலும் மேலும் செழித்து வளர, ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் உதவிகரமாக இருக்கும் என்றும் துறை சார்ந்த நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

<u>போன் பே</u>

அனைவருக்கும் அரசே வேலை வழங்க முடியாது என்றாலும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புடன் இது சாத்தியமே என்று மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் திரு ஜிதன் ராம் மாஞ்சி கூறி உள்ளார். சாலையோர வியாபாரிகள் உட்பட முறைசாராக் குறு வியாபாரிகள், மற்றும் கைவினைக் கலைஞர்கள், அரசின் உத்யம் அசிஸ்ட் இணைய தளத்தில் முற்றிலும் டிஜிட்டல் முறையில் பதிவு பெற ஏதுவாக, சிறுதொழில் வளர்ச்சி வங்கியின் ஒத்துழைப்புடன் ஃபோன்-பே நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள புதிய வசதியை, அமைச்சர் இன்று புதுடெல்லியில் தொடக்கி வைத்துப் பேசினார். வங்கி கடன் உட்பட அரசுத் திட்டங்களின் பலன்களை சிறு வியாபாரிகள் எளிதில் பெற இந்த வசதி உதவிகரமாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

<u>புதுச்சேரி-வாழ்த்து</u>

நாட்டின் 15-ஆவது குடியரசு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். திரு ராதாகிருஷ்ணனின் ஆழ்ந்த அனுபவமும் நிர்வாகத் திறனும், நாட்டின் சீரான ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

திரு ராதாகிருஷ்ணனின் சமுதாய பணிகளும் அர்ப்பணிப்பும் இளைஞர்களுக்கு வழிகாட்டியாக அமையும் என்றும் அவர் கூறி உள்ளார். இந்திய மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தி, சர்வதேச அளவில் இந்தியாவின் அந்தஸ்தை உயர்த்துவதில், திரு சி பி ராதாகிருஷ்ணன் அனுபவமும் நிர்வாகத் திறனும் பேருதவியாக இருக்கும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலில் திரு சி பி ராதாகிருஷ்ணனுக்கு கிடைத்துள்ள வெற்றி, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் அர்ப்பணிப்பு, பொது சேவை மற்றும் வலுவான தலைமைத் துவத்தின் பிரதிபலிப்பு என்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.

<u>தற்கொலை தினம்</u>

உலக அளவில் ஆண்டு தோறும் 7.2 லட்சம் பேர் தற்கொலை செய்து கொள்வதாக மதிப்பிடப்படும் நிலையில், தற்கொலை எண்ணத்திற்கான காரணங்களை அகற்றி, தற்கொலை விகிதத்தை குறைக்கும் நோக்கத்துடன் உலக தற்கொலை தடுப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. தேசிய குற்றப் பதிவேடுகள் அமைவனம் வெளியிட்டுள்ள தரவுகளின் படி இந்தியாவில் கடந்த 2017-முதல், 2022-ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் தற்கொலை எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதில் 26.3 சதவிகித தற்கொலை விகிதத்துடன் புதுச்சேரி, நாட்டிலேயே 3-ஆம் இடத்தில் உள்ளது. இந்நிலையை மாற்றும் வகையில், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற, தற்கொலை தடுப்பு தின விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், சுகாதாரத் துறை இயக்குநர் திரு செவ்வேள், தேசிய மனநல திட்ட அதிகாரி டாக்டர் பாலன் பொன்மணி ஸ்டீபன் ஆகியோர் கொடி அசைத்து தொடக்கி வைத்தனர். செவிலியர் பயிற்சி மாணவ-மாணவியர் உட்பட 300-க்கும் மேற்பட்டவர்கள், விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திய வண்ணம் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில், சுகாதாரத் துறையின் தொடர்ச்சியான விழிப்புணர்வு முயற்சிகள் காரணமாக கடந்த 3 ஆண்டுகளை விட தற்போது தற்கொலை விகிதம் குறைந்து இருப்பதாக டாக்டர் பாலன் பொன்மணி ஸ்டீபன் தெரிவித்தார்..

<u>வானிலை</u>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் நீலகிரி, தேனி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 16-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திண்டுக்கல்லில், 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

<u>கிரிக்கெட்</u>

ஆசிய கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இரவு துபாயில் நடைபெறும் ஏ-பிரிவு போட்டியில், இந்தியா-யுஏஇ அணிகள் மோத உள்ளன. அபுதாபியில் நேற்று நடைபெற்ற தொடக்கப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி, 94 ரன் வித்தியாசத்தில், ஹாங்காங் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

**<u>கூட்டுறவு</u>**

தேசிய பால் வள மேம்பாட்டு வாரியத்தின் வைர விழாவை ஒட்டி, வாரியத்துடன் இணைந்து, புதுச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள மாநில அளவிலான கருத்தரங்கம், புதுச்சேரியில் நாளை நடைபெற உள்ளது. சர்வதேச கூட்டுறவு ஆண்டில் கூட்டுறவின் வளர்ச்சி என்னும் தலைப்பிலான இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு சம்பத், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், கூட்டுறவுத் துறை செயலர் திரு ஜெயந்த்த குமார் ரே உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.